தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **04.11.2026**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மத்திய பட்டு வாரியத்தில் விஞ்ஞானி –B பதவியில் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பட்டதாரிகள்

பெங்களூரில் அமைந்துள்ள மத்திய பட்டு வாரியமானது இந்தியாவில் பட்டு உற்பத்திக்குத் தேவையான ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டு, பட்டுப்புழு விவசாயிகளின் உயிர் நாடியாகத் திகழ்கிறது. இது இந்தியா முழுவதிலும் பல்வேறு உறுப்பு ஆராய்ச்சி நிறுவனங்களைக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் பட்டுப்புழுவியலில் **18** மற்றும் இதர துறைகளில் **18** என மொத்தம் **36** காலிப்பணியிடங்களை நிரப்பும் நோக்குடன் விஞ்ஞானிகளை பணியமர்த்துவதற்கான அறிவிப்பு **16.05.2025** அன்று மத்திய பட்டு வாரியத்தின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது.

மேலும், இந்த பணியமர்த்தலானது இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படுகிறது. முதலில் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் மூலம் நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்ற முதுமறிவியல் பட்டதாரிகள் விஞ்ஞானி-B பணிக்கு விண்ணப்பிக்க **02.03.2026** முதல் **31.03.2026** வரை அனுமதிக்கப்பட்டனர். அதில் தேர்வுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு **27.10.2026** முதல் **30.10.2026** வரை பெங்களூரில் அமைந்துள்ள மத்திய பட்டு வாரியத் தலைமையகத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் தேர்வு நடைபெற்றது. இந்த நேர்காணலில் தேர்ச்சி பெற்றவர்களின் முடிவுகள் **02.11.2026** அன்று மத்திய பட்டு வாரியத்தின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது.

விஞ்ஞானி-B பணிக்கான முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக மேட்டுப்பாளையத்தில் இயங்கி வரும் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்ற பட்டுப்புழுவியல் துறை மாணவர்கள் சுமார் **9** பேர் விஞ்ஞானி-B பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பட்டுப்புழுவியல் படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு என்பது குறைவாகவே உள்ளது என்று கூறப்பட்டு வரும் நிலையில் இத்துறையிலிருந்து **9** பட்டதாரிகள் தேசிய அளவில் நடத்தப்பட்ட விஞ்ஞானி-B பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதற்கு முன்பு 2023 மற்றம் 2025 ஆம் ஆண்டு நடைப்பெற்ற மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி – B தேர்வில், இதே துறையிலிருந்து 21 பேர் தேர்வு செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் பட்டுப்புழுவியல் துறையில் இளமறிவியல், முதுமறிவியல் மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. முதுமறிவியல் மற்றும் முனைவர் பட்டம் படித்த மாணவர்கள் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்களாகவும், மத்திய பட்டு வாரியத்தின் கீழ் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களில் விஞ்ஞானிகளாகவும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், இளமறிவியல் பயின்ற பட்டதாரிகள், தமிழ்நாடு மாநில பணியாளர்கள் தேர்வாணையம், மத்திய, மாநில வங்கி பணிகள், ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வு, மத்திய பணியாளர்கள் தேர்வாணையம் மற்றும் ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி துறையின் கீழ், பட்டுப்புழுவியல் துறையை சேர்ந்த 22 மாணவர்கள் உதவி இயக்குநர், உதவி பட்டு ஆய்வாளர் மற்றும் பட்டு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொடர்பு அலுவலர்